Since-2000
Dr.HARIHARAN'S
தென்றல் IAS அகாடமி
An ISO 9001-2015 CERTIFIED INSTITUTION
PARINAGAR, KARAIKUDI. CONTACT: 98435 88767, 99435 55767
5000 க்கும் மேற்பட்ட வெற்றியாளர்கள்

# வரலாறு

## (i) 1.சிந்துவெளி நாகரிகம் (கி.மு3250 – கி.மு2750)

**உலகின் தொன்மையான நாகரிகங்கள்:-**

- மெசபடோனியா நாகரிகம் - பொ.ஆ.மு.3500 முதல் 2500 – யூப்ரடீஸ், டைகரீஸ் ஆறுகள்.
- எகிப்து நாகரிகம் - பொ.ஆ.மு.3100 முதல் 1100 வரை – நைல் நதி
- சீனா நாகரிகம் - பொ.ஆ.மு. 1700 முதல் 1122 வரை – ஹுவான்கோ நதி
- சிந்து சமவெளி நாகரிகம் - பொ.ஆ.மு. 3300 முதல் 1900 வரை – சிந்து நதி.
- சிந்து சமவெளி நாகரிகத்தை மூன்று பகுதிகளாக பிரிக்கலாம். அவை :
  முந்தைய காலம் பொ.ஆ.2900 முதல் பொ.ஆ2500.
  மத்தியக் காலம் பொ.ஆ.2500 முதல் பொ.ஆ.2000
  பிந்தையக் காலம் பொ.ஆ. 2000 முதல் பொ.ஆ. 1750

**சிந்துவெளி நாகரிகம்:-**

- ஹரப்பா நாகரிகம் என்று அழைக்கப்படும் சிந்துவெளி நாகரிகம் இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் சுமார் 1.3 மி.ச.கி.மீட்டர் பரவியிருந்தது.
- மேற்கே – பாகிஸ்தான் - ஈரான் எல்லையில் உள்ள சுட்காஜென் - டோல்.
- வடக்கே – ஷோர்டுகை (ஆப்கானிஸ்தான்)
- கிழக்கே – ஆலம்கீர்பூர்
- தெற்கே – டைமதாபாத் (மகாராஷ்ட்ரா)
- இந்நாகரிகம் பரவியுள்ள பகுதிகள் குஜராத், பாகிஸ்தான், இராஜஸ்தான், மற்றும் ஹரியானா.

**திட்டமிடப்பட்ட நகரங்கள்:-**

- ஹரப்பா – பஞ்சாப், பாகிஸ்தான்.
- மொகஞ்சதாரோ – சிந்து, பாகிஸ்தான்.
- தொலவீரா - குஜராத், இந்தியா
- காலிபங்கன் - இராஜஸ்தான், இந்தியா
- லோத்தல் - குஜராத், இந்தியா
- பனவாலி - இராஜஸ்தான், இந்தியா
- ராகிக்காரி – ஹரியானா, இந்தியா
- சுர்கொடா – குஜராத், இந்தியா

**ஹரப்பா:-**

- இஃது ஒரு புதையுண்ட நகரம். இதன் இடிப்பாடுகளை முதன்முதலில் சார்லஸ் மேசன் என்ற ஆங்கிலேயர் தமது நூலில் விவரித்தார்.
- இவர் தற்போது பாகிஸ்தானில் உள்ள இந்தியாவின் வடமேற்குப் பகுதியை பார்வையிட்ட போது சில செங்கல் திட்டுக்கள் இருப்பதைக் கண்டார்.
- அந்த பாழடைந்த செங்கற்கோட்டை உயரமான சுவர்களுடனும் கோபுரங்களுடனும் ஒரு மலைமீது கட்டப்பட்டுள்ளது.
- இதுதான் ஹரப்பா இருந்ததற்கு முதல் வரலாற்று ஆதாரம்.
- 1856-ல் பொறியாளர்கள் லாகூர் முதல் கராச்சி வரை இரயில் பாதை அமைக்க நிலத்தை தோன்டும் போது அதிகமான சுட்ட செங்கல்கள் கண்டுபிடிக்கப்பட்டன.
- 1920-ல் தொல்பொருள் ஆய்வாளர்கள் ஹரப்பா மற்றும் மொகஞ்சதாரோ நகரங்களை அகழாய்வு செய்ய ஆரம்பித்தனர்.

TIA THENDRAL SINCE - 2000 ISO 9001 : 2015 CERTIFIED SMART WORK SURE SUCCESS

- 1924-ல் இந்திய தொல்பொருள் ஆய்வுதுறையின் இயக்குநர் ஜான் மார்ஷல் ஹரப்பாவிற்க்கும் மொகஞ்சதாரோவிற்கும் இடையே பொதுவான அம்சங்கள் இருப்பதை கண்டறிந்தார்.
- ஹரப்பா மொகஞ்சதாரோவை விட பழமையானது என கண்டறிந்தனர்.

**காலவரையறை:-**

- புவி எல்லை – தெற்கு ஆசியா.
- கால பகுதி – வெண்கலக் காலம்
- காலம் - பொ.ஆ.முன் 3300 முதல் 1900 வரை.
- பரப்பளவு – 13 இலட்சம் ச.கி.மீட்டர்.
- நகரங்கள் - 6 பெரிய நகரங்கள்
- கிராமங்கள் - 200 க்கும் மேற்பட்ட கிராமங்கள்
- ஹரப்பா நாகரிகம் ஒரு நகர நாகரிகம். காரணம் சிறப்பான நகரத் திட்டமிடல், சிறப்பான கட்டிடக்கலை வேலைபாடு, தூய்மைக்கும், சுகாதாரத்திற்கும் கொடுக்கப்பட்ட அதிக முன்னுரிமை திட்டமிடப்பட்ட எடைக்கற்கள் மற்றும் அளவுகள் விவசாயம் மற்றும் கைவினைத் தொழிலுக்கான திடமான அடித்தளம்.
- ஹரப்பா நாகரிகத்தின் தனித்தன்மை :- திட்டமிட்ட நகர அமைப்பு

| மேல் நகர அமைப்பு | கீழ் நகர அமைப்பு |
|---|---|
| 1)நகரத்தின் மேற்குப் பகுதி சற்று உயரமானது.<br>2)அது கோட்டை எனப்பட்டது.<br>3)நகர நிர்வாகிகள் இதைப் பயன்படுத்தினர்.<br>4)பெருங்குளமும் தானியக்களஞ்சியமும் இருந்தன. | 1)நகரத்தின் கிழக்கு பகுதி சற்று தாழ்ந்த உயரமுடையது.<br>2)அதிக பரப்பு கொண்டது.<br>3)இது பொது மக்கள் வகிக்கும் இடமாக இருந்தது. |

THENDRAL SINCE - 2000 ISO 9001 : 2015 CERTIFIED SMART WORK SURE SUCCESS